**நவம்பர் – 29**

# TNPSC துளிகள்

- சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகத்தின் பிரவர்த்தக் டெக்னாலஜிஸ் அறக்கட்டளையானது, மனித திறன் மேம்பாட்டினை முக்கிய மையமாகக் கொண்ட ஒரு செயற்கை நுண்ணறிவுக்கான மையத்தினை (CHAI) சமீபத்தில் தொடங்கியது.
- சோனி பிக்சர்ஸ் நெட்வொர்க்ஸ் இந்தியா நிறுவனமானது, 2024 முதல் 2031 ஆம் ஆண்டு வரையிலான அனைத்து ஆசிய கிரிக்கெட் வாரிய போட்டிகளுக்கான பிரத்யேக ஊடக உரிமைகளைப் பெற்றுள்ளது.
- ஜார்க்கண்ட் மாநிலச் சட்டமன்றத் தேர்தலில் ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா (JMM) தலைமையிலான கூட்டணி வெற்றி பெற்றதை அடுத்து, அங்கு ஹேமந்த் சோரன் முதல்வராகப் பதவியேற்றுள்ளார்.
- பஞ்சாப் நேஷனல் வங்கி (PNB) ஆனது, பசுமை இல்ல வாயு உமிழ்வு கணக்கியல் நடைமுறைகளை மேம்படுத்துவதற்காக கார்பன் கணக்கீட்டு நிதியியலுக்கான (PCAF) உலகளாவிய அங்கீகாரம் பெற்ற கூட்டாண்மையில் கையெழுத்திட்டுள்ளது.
- பீகாரைச் சேர்ந்த பதின்மூன்று வயதான வைபவ் சூர்யவன்ஷி, IPL ஏலத்தில் இதுவரை ஏலம் விடப்பட்ட இளம் வீரர் என்ற பெருமையினை பெற்றுள்ளார்.
    - இராஜஸ்தான் ராயல்ஸ் அணியானது அவரை 1.10 கோடி ரூபாய்க்கு ஏலம் எடுத்து உள்ளது.
- தேசிய முந்திரி தினம் ஆனது ஆண்டுதோறும் நவம்பர் மாதம் 23 ஆம் தேதியன்று அனுசரிக்கப் படுகிறது.
- முகலாயப் பேரரசுக்கு எதிராக அசாம் பகுதியினை நன்கு ஆதரித்து காத்த லச்சித் போர்புகான் அவர்களின் பிறந்த நாளான நவம்பர் 24 ஆம் தேதியன்று (2024) லச்சித் திவாஸ் கொண்டாடப்படுகிறது.

# தமிழ்நாடு செய்திகள்

## விழுதுகள் – ஒற்றைத் தீர்வு மையம்




- சென்னை நகரில் சோழிங்கநல்லூரில் உள்ள கண்ணகி நகரில் அமைக்கப்பட்டுள்ள 'விழுதுகள் – ஒற்றைத் தீர்வு மையத்தினை' தமிழக முதல்வர் அவர்கள் திறந்து

வைத்தார்.

- இது மாற்றுத் திறனாளிகளுக்கான உடல்நலம் தொடர்பான மறுவாழ்வு சேவைகளை வழங்குகிறது.
- மாற்றுத் திறனாளிகள் நலத் துறையால் நிறுவப்பட்ட இது உலக வங்கியின் நிதி உதவியுடன் கூடிய தமிழ்நாடு உரிமைகள் திட்டத்தின் அங்கமாகும்.
- இத்திட்டத்தின் கீழ் மொத்தம் 273 மையங்கள் நிறுவப்பட உள்ளன.
- சிறப்புக் கல்வி, பார்வை அளவீட்டியல், கேட்பியல் மற்றும் பேச்சு பயிற்சி மருத்துவம், உடலியக்க மருத்துவம், செய்தொழில் தொடர்பான சிகிச்சை முறை மற்றும் உளவியல் ஆலோசனை ஆகிய மறுவாழ்வு வல்லுநர்கள் ஒரே கட்டமைப்பின் கீழ் பணியாற்றுவது இந்தியாவில் இதுவே முதல் முறையாகும்.

### சதய விழா 2024

- சோழப் பேரரசர் முதலாம் இராஜராஜ சோழனின் பிறந்தநாள் ஆனது ஒவ்வோர் ஆண்டும் சதய விழாவின் போது தஞ்சாவூரில் கொண்டாடப்படுகிறது.
- சதய விழாவானது தமிழ் மாதமான ஐப்பசியில் (அக்டோபர் மாதத்தின் நடுப்பகுதி முதல் நவம்பர் மாதத்தின் நடுப்பகுதி வரை) நடைபெறுகிறது.
- கி.பி. 947 ஆம் ஆண்டில் அருள்மொழி வர்மன் எனும் பெயரில் பிறந்த அவர் வரலாற்றின் மிகச் சிறந்த மற்றும் தொலைநோக்கு ஆட்சியாளர்களில் ஒருவராக இவர் மிகவும் புகழ் பெற்றார்.
- இராஜராஜ சோழனின் ஆட்சியானது, கி.பி. 985 முதல் 1014 ஆம் ஆண்டு வரை, இராணுவ வலிமை மற்றும் உள்ளார்ந்த நிர்வாகக் கொள்கைகளால் குறிக்கப்பட்டது.
- இராஜராஜேஸ்வரம் என்றும் அழைக்கப்படுகின்ற ஸ்ரீபிரகதீஸ்வரர் கோயில் (பெரிய கோயில்) ஆனது, கி.பி. 1003 மற்றும் 1010 ஆம் ஆண்டுகளுக்கு இடையில் இராஜராஜ சோழனால் கட்டமைக்கப்பட்டது.




## சர்வதேசச் செய்திகள்

### உலகளாவிய தகவல் தொடர்பு தளம்

- COP29 மாநாட்டில் எரிசக்தி தினத்தன்று, ஐக்கிய நாடுகள் தொழில்துறை மேம்பாட்டு அமைப்பு (UNIDO) மற்றும் பருவநிலை சபை ஆகியவை உலகளாவிய தகவல் தொடர்பு தளத்தினை (GMP) அறிமுகப்படுத்தியுள்ளன.

- மிகவும் அதிகளவில் வாயு உமிழ்வினை வெளியிடும் தொழிற்சாலைகளில் கார்பன் நீக்கத்தினை விரைவுப்படுத்துவதில் இந்த முன்னெடுப்பு கவனம் செலுத்துகிறது.
- இந்த முதல் நிகழ்ச்சியானது, நிகரச் சுழிய உமிழ்வு இலக்கினை அடைவதில் உள்ள 125 பில்லியன் அமெரிக்க டாலர்கள் மதிப்பிலான வருடாந்திர அளவில் மிகப்பெரும் நிதி இடைவெளியை எடுத்துரைக்கிறது.
- தொழிற்சாலை கார்பன் நீக்கத்திற்கான GMP ஆனது, UNIDO அமைப்பினால் நடத்தப் படும் செயலகத்துடன், பருவநிலை சபை அமைப்பின் ஆதரவு நெறிமுறையாகக் கட்டமைக்கப்படுகிறது.
- தகவல் தொடர்பு செயல்முறையானது, பல்வேறு நாடுகளின் தனிப்பட்ட தேவைகளை நிவர்த்தி செய்வதையும் சரியான ஆதரவை வழங்குவதையும் நோக்கமாகக் கொண்டு உள்ளது.




# பொருளாதாரச் செய்திகள்

## MSME துறைகளில் வேலைவாய்ப்புகள் உருவாக்கம்

| Type of Enterprise (Manufacturing + Service) | Investment (Rs.) | Turnover |
|---|---|---|
| Micro | 1 crore | 5 crores |
| Small | 10 crores | 50 crores |
| Medium | 50 crores | 250 crores |


- இந்தியாவின் குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் (MSMEs) ஆனது, கடந்த 15 மாதங்களில் சுமார் 10 கோடி புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கியுள்ளன.
- கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில், 2.33 கோடியாக இருந்த பதிவு செய்யப்பட்ட MSME நிறுவனங்களின் எண்ணிக்கையானது, 5.49 கோடியாக உயர்ந்துள்ளது.
- இந்த நிறுவனங்களால் உருவாக்கப்பட்ட வேலைவாய்ப்புகளின் எண்ணிக்கையானது, இந்த காலகட்டத்தில் 13.15 கோடியிலிருந்து 23.14 கோடியாக உயர்ந்துள்ளது.

- மொத்த வேலைவாய்ப்பில் 2.38 கோடி முறைசாரா நுண் உற்பத்தி அலகுகள் மூலமான 2.84 கோடி வேலைவாய்ப்புகளும், பெண்களுக்கான 5.23 கோடி வேலை வாய்ப்புகளும் அடங்கும்.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

## WOH G64 நட்சத்திரம்

- வானியலாளர்கள் நமது விண்மீன் மண்டலத்திற்கு வெளியே ஒரு நட்சத்திரத்தின் வாழ்க்கைச் சுழற்சியில் ஒரு முக்கியமான தருணத்தைப் படம்பிடித்த முதல் விரிவான புகைப்படத்தைக் கைப்பற்றியுள்ளனர்.
- WOH G64 என்று அழைக்கப்படுகின்ற இந்த நட்சத்திரம் ஆனது, மிகவும் வியக்கத்தக்க வகையில் சுமார் 1,60,000 ஒளி ஆண்டுகள் தொலைவில் உள்ள பெரிய சீரற்ற பெரு விண்மீன் திரளில் (மாகெல்லானிக் கிளவுட்) அமைந்துள்ளது.
- WOH G64 என்பதற்கு "பெஹிமோத் நட்சத்திரம்" என்று செல்லப் பெயர் வழங்கப் பட்டு உள்ளது.
- WOH G64 நமது சூரியனை விட தோராயமாக 2,000 மடங்கு அளவு கொண்ட செந்நிற மீப்பெரு நட்சத்திரம் என வகைப்படுத்தப்பட்டுள்ளது.




# சுற்றுச்சூழல் செய்திகள்

## உலகளாவிய நைட்ரஸ் ஆக்சைடு மதிப்பீட்டு அறிக்கை

- நைட்ரஸ் ஆக்சைடு ஆனது 120 ஆண்டுகள் ஆயுட்காலம் கொண்டது மற்றும் பூமியை வெப்பமாக்குவதில் ஒரு டன் உமிழ்வு கார்பன் டை ஆக்சைடை விட தோராயமாக 270 மடங்கு சக்தி வாய்ந்தது.
- இன்றுவரையில் நிகரப் புவி வெப்பமடைதலில் தோராயமாக 10% (சுமார் 0.1°C) ஆனது மனிதகுல உமிழ்வுகள் காரணமாக ஏற்பட்டதாகும்.
- வளிமண்டலத்தில் உள்ள வாயுக்கள் ஆனது, தொழிற்துறைக்கு முந்தைய காலத்தில் இருந்து 20% அதிகரித்துள்ளது.
- கடந்த ஐந்தாண்டுகளில் (2017–2021) வருடாந்திர வளர்ச்சி விகிதம் ஆனது, ஆண்டிற்குப் பில்லியனுக்கு 1.2 பாகங்கள் ஆகவும், 2000 ஆம் ஆண்டின் முற்பகுதியில் (2000-2004) இருந்த அளவை விட இரு மடங்கு அதிகமாகவும் இருந்தது.

- 1980 மற்றும் 2022 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில், வளிமண்டல வாயுச் செறிவுகள் ஒரு பில்லியனுக்கு 301 முதல் 336 பாகங்களாக அதிகரித்தன.
- தற்போது அவற்றுள் 75% உமிழ்வுகளுக்கு வேளாண்மை தான் முதன்மை ஆதாரமாக உள்ளது.
- இதில் தோராயமாக 90% உமிழ்வானது, வேளாண் நிலங்களில் செயற்கை உரங்கள் மற்றும் இயற்கை உரங்கள் பயன்படுத்தப் படுவதாலும், சுமார் 10% உமிழ்வானது உர மேலாண்மை நடவடிக்கைகளாலும் ஏற்படுகிறது.
- நைட்ரஸ் ஆக்சைடானது தற்போது ஓசோன்-அடுக்கு சிதைவை ஏற்படுத்துகின்ற வளி மண்டலத்தில் உமிழப் படும் வாயுவாக உள்ளது.




## ரார்செஸ்டஸ் அசாக்ரென்சிஸ்



- மேகாலயாவில் புதிய தவளை இனம் ஒன்றினை அறிவியலாளர்கள் கண்டறிந்து உள்ளனர்.
- அந்த இனத்திற்கு 'ரார்செஸ்டஸ் அசாக்ரென்சிஸ்' என்று பெயரிட்டுள்ளனர்.

- இது மேகாலயாவின் காரோ மலைகளில் உள்ள எமேன் அசாக்ரே சமூக காப்பகத்தின் பெயரால் அழைக்கப்படுகிறது.
- இந்த குழுவானது, காரோ மலைகளில் இக்சலஸ் கரோ மற்றும் இக்ஸலஸ் கெம்பியே ஆகிய இரண்டு இனங்களையும் மீண்டும் கண்டறிந்துள்ளது.

# பிரபலமானவர்கள், விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

## தேசிய கோபால் ரத்னா விருதுகள், 2024




- கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத் துறை (DAHD) ஆனது, தேசிய கோபால் ரத்னா விருதுகளின் (NGRA) வெற்றியாளர்களை அறிவித்துள்ளது.
- இது 2024 ஆம் ஆண்டிற்கான கால்நடை மற்றும் பால் வளத் துறையில் மிக உயரிய தேசிய விருதுகளில் ஒன்றாகும்.
- இந்த விருது பின்வரும் மூன்று பிரிவுகளில் வழங்கப்படுகிறது,,
  - சிறந்தப் பால் பண்ணையாளர் நாட்டு மாடு/எருமை இனங்களை வளர்த்தல்,
  - சிறந்த செயற்கை கருவூட்டல் தொழில்நுட்ப வல்லுநர் (AIT) மற்றும்
  - சிறந்தப் பால் கூட்டுறவு / பால் உற்பத்தியாளர் நிறுவனம் / பால் பண்ணை உற்பத்தியாளர் அமைப்பு.
- மூன்றாவது பிரிவில், கடலூரின் TND 208 வடபாதி MPCS லிமிடெட் ஆனது மூன்றாம் பரிசை வென்றது.


# முக்கிய தினங்கள்

## தேசியப் பச்சிளம் குழந்தைகள் வாரம் - நவம்பர் 15/21

- குழந்தைகளின் உயிர் பிழைப்பு மற்றும் வளர்ச்சிக்கு புதிதாகப் பச்சிளம் குழந்தையைப் பராமரிப்பதன் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தச் செய்வதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- குழந்தைப் பருவமானது ஒரு நாளுக்கு அதிக உயிரிழப்பு ஏற்படும் அபாயத்தைக் கொண்டுள்ளதால், பச்சிளம் குழந்தைகளின் ஆரம்பகாலக் குழந்தைப் பருவம் ஆனது (அதன் வாழ்வின் முதல் 28 நாட்கள்) குழந்தை உயிர் வாழ்வதற்கு மிகவும் முக்கியம் ஆனதாகும்.
- பச்சிளம் குழந்தையின் உயிரிழப்பு விகிதம் ஆனது (NMR) 2000 ஆம் ஆண்டில் 1000க்கு

44 ஆக இருந்த நிலையில் இது 2024 ஆம் ஆண்டில் 1000க்கு 18 ஆகக் குறைந்துள்ளது. மேலும் 2025 ஆம் ஆண்டிற்குள் 1000க்கு 14 ஆகவும் குறைக்கப் படும்.

- 2035 ஆம் ஆண்டிற்குள் ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளின் உயிரிழப்பு விகிதத்தை 1000க்கு ≤ 20 ஆக குறைப்பதே இதன் நோக்கம் ஆகும்.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Safety, Quality and Nurturing care – Birth Right of Every Newborn" என்பதாகும்.




## உலக நாள்பட்ட நுரையீரல் நோய் தினம் 2024 - நவம்பர் 20


- இது 2002 ஆம் ஆண்டு முதல் ஒவ்வோர் ஆண்டும் நவம்பர் மாதத்தின் மூன்றாவது புதன் கிழமையன்று அனுசரிக்கப்படுகிறது.
- இது நாள்பட்ட நுரையீரல் அடைப்பு நோய் (COPD) பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தச் செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- COPD ஆனது உலகளவில் பதிவாகும் உயிரிழப்புகளுக்கான 3வது முக்கியக் காரணம் ஆகும்.
- 2019 ஆம் ஆண்டின் படி, இது 32.3 லட்சம் உயிரிழப்புகளை ஏற்படுத்தியுள்ளது.
- COPD ஏற்படுவதற்கான முக்கிய காரணங்களில் புகையிலை புகைத்தலும் ஒன்றாகும்.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Know Your Lung Function" என்பதாகும்.




## பிபனோச்சி தினம் - நவம்பர் 23

- பைசா நகரத்தின் லியோனார்டோ எனப்படும் ஃபிபனாச்சி அவர்களின் பெயரால் இந்த எண் வரிசைக்கு இப்பெயரிடப்பட்டது.

- 11/23 தேதியானது மிகவும் பிரபலமான ஃபிபனாச்சி எண் வரிசையின் முதல் நான்கு எண்களுடன் - 1, 1, 2, 3- நேர்த்தியாகப் பொருந்துகிறது.
- லிபர் அபாகி என்ற புத்தகத்தில் அவர் இந்த எண் வரிசையை மேற்கத்திய உலகிற்கு அறிமுகப்படுத்தினார்.
- அவரது எண் வரிசையானது (ஒவ்வொரு எண்ணும் அதற்கு முந்தைய இரண்டு எண்களின் கூட்டுத் தொகை) இயற்கை, கலை மற்றும் வடிவமைப்பின் மிகச் சிறப்பு அம்சமானது.




## தேசியப் பால் தினம் - நவம்பர் 26





- இந்தியாவின் வெண்மைப் புரட்சியின் பின்னணியில் இருந்த டாக்டர் வர்கீஸ் குரியன் அவர்களின் பிறந்த நாளினைப் போற்றும் விதமாக இத்தினம் அனுசரிக்கப்படுகிறது.
- இந்த நாள் ஆனது, மனித ஊட்டச்சத்தில் பாலின் மிகவும் முக்கியப் பங்கை எடுத்துக் காட்டுகிறது மற்றும் அதன் ஆரோக்கிய நன்மைகள் பற்றிய பெரும் விழிப்புணர்வை ஏற்படுத்துகிறது.
- டாக்டர் குரியன் அவர்கள் 'இந்திய வெண்மைப் புரட்சியின் தந்தை' என்று அழைக்கப்

படுகிறார்.

- ❖ உலகின் மிகவும் பெரிய ஒரு வேளாண்மைசார் திட்டமாக அறியப்படும் அவரது 'ஃப்ளட் நடவடிக்கைக்காக' (1970) அவர் பிரபலமாக அறியப்படுகிறார்.
- ❖ அவரது முயற்சியால், 1998 ஆம் ஆண்டில் அமெரிக்காவை விஞ்சி இந்தியா மிகப்பெரிய பால் உற்பத்தியாளராக ஆனது.
- ❖ அவர் தேசியப் பால்வள மேம்பாட்டு வாரியத்தின் (NDDB) ஸ்தாபனத் தலைவர் ஆவார்.
- ❖ அமுல் தயாரிப்பு நிறுவனத்தின் ஸ்தாபனத்திலும் வெற்றியிலும் அவர் முக்கியப் பங்கு வகித்தார்.
- ❖ அவருக்கு பத்மஸ்ரீ (1965), பத்ம பூஷன் (1966), பத்ம விபூஷன் (1999) மற்றும் உலக உணவுப் பரிசு (1989) ஆகிய விருதுகள் வழங்கப்பட்டன.
- ❖ ஒவ்வோர் ஆண்டும் ஜூன் மாதத்தின் முதல் நாள் ஆனது உலகப் பால் தினமாக கடை பிடிக்கப் படுகிறது.

## இந்திய அரசியலமைப்பு தினம் - நவம்பர் 26




- ❖ இது சம்விதான் திவாஸ் என்றும் அழைக்கப்படுகிறது.
- ❖ 1950 ஆம் ஆண்டு ஜனவரி 26 ஆம் தேதியன்று நடைமுறைக்கு வந்த இந்திய அரசியல் அமைப்பு ஆனது 1949 ஆம் ஆண்டில் ஏற்றுக் கொள்ளப் பட்டதை இந்த நாள் குறிக்கிறது.
- ❖ குடியுரிமை, தேர்தல்கள், தற்காலிகப் பாராளுமன்றம், தற்காலிக மற்றும் இடைநிலை விதிகள் தொடர்பான சில விதிகளும் 1949 ஆம் ஆண்டு நவம்பர் 26 ஆம் தேதி முதல் உடனடியாக அமலுக்கு வந்தன.
- ❖ அரசியலமைப்பு உருவாக்கத்திற்கு 2 ஆண்டுகள், 11 மாதங்கள் மற்றும் 18 நாட்கள் ஆனது.
- ❖ இந்த நாள் ஆனது, டாக்டர் அம்பேத்கர் அவர்களின் பிறந்த நாளுடன் ஒன்றி வருகிறது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★